[2005 ஏப்ரல் 12

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக அமைக்கக்கூடிய தூண்டில் வளைவுப் பணிகளிலே, மேற்படி பொழிக்கரையிலிருந்து கீழ்மணக்குடி பகுதி வரையுள்ள கடற்கரைப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஏற்கெனவே முதல் கேள்வியிலே கேட்டது, பெரியகாடு தூண்டில் வளைவுப் பணிக்காக ஏற்கெனவே HUDCO நிதியின்மூலமாக ஒதுக்கப்பட்ட நிதியிலே 4.58 கோடி ரூபாய் savings ஆக இருந்து கொண்டு இருக்கிறது. எனவே HUDCO ஏற்கெனவே ஒதுக்கிய அந்த நிதியில்தான் இந்தப் பணி முழுமை பெறாமல் இருக்கிறது. எனவே அந்தப் பணியை வேகமாகச் செய்ய வேண்டும் என்று சொன்னால், அந்த savings நிதியை எடுத்து அந்தப் பணியைச் செய்வோம் என்று சொன்னால், விரைவாக அந்தப் பணி முடிக்கப்படும். எனவே அந்த அடிப்படையிலே பெரியகாடு தூண்டில் வளைவு முடிப்பதற்கான மதிப்பீடு என்பது, 4 கோடி ரூபாய்க்குத்தான் பொதுப் பணித் துறை அரசுக்கு அனுப்பியிருக்கிறது. ஏற்கெனவே 4.58 கோடி ரூபாய் savings நிதி இருக்கிற காரணத்தால், அந்த savings நிதியிலே இந்தப் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதிகளில், விடுபட்டுப் போன பகுதிகளில், சேமிப்பு நிதி இருந்தால் அந்தப் பணியை எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு சேமிப்பு நிதி இல்லையென்றால், வருகின்ற காலங்களில் எடுக்கின்ற கற்தடுப்புச் சுவர் மற்றும் தூண்டில் வளைவு அமைக்கின்ற பணிகளில் அப்பணி முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பாளையங்கோட்டை-அருப்புக்கோட்டை சாலை, வைப்பாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. என்.கே. பெருமாள் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. என்.கே. பெருமாள்.

2005 ஏப்ரல் 12]

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாளையங்கோட்டை–அருப்புக்கோட்டை சாலையில் வைப்பாற்றின் குறுக்கே ஒரு புதிய பாலம் கட்ட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்:

அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட பாலமானது "பருவக்குடி–கோவில்பட்டி–எட்டையபுரம்–விளாத்திகுளம்–வேம்பார் சாலை கி.மீ 73/4–8–ல் வைப்பாற்றின் குறுக்கே அமைந்துள்ளது. தற்போது இவ்விடத்தில் 3.00 மீட்டர் அகலமும், 1.50 மீட்டர் உயரமும் கொண்டதாக 22 கண்கள் கொண்ட தாம்போகி உள்ளது. மழைக் காலங்களில் இத்தாம்போகியின் மேல் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து மிகவும் மோசமாகத் தடைப்படுகிறது. ஒவ்வொரு முறை போக்குவரத்து தடைப்படும்பொழுதும், விளாத்திகுளம் வட்டாரத்தினைச் சார்ந்த பொது மக்கள் எட்டையபுரம், கோவில்பட்டி, தூத்துக்குடி போன்ற முக்கிய ஊர்களுக்குச் செல்ல சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் அதிகமாகப் பயணம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், வெள்ளம் செல்லும் காலத்தில் சில சமயங்களில் உயிர்ச் சேதங்களும் ஏற்படுகின்றன.

2. மேலும், விளாத்திகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் பெரும்பாலும் விவசாயத் தொழில் நடைபெறுவதால், மழைக் காலங்களில் தடையின்றி நேரடியாக அருகில் உள்ள முக்கிய ஊர்களுக்குச் செல்ல, இவ்விடத்தில் 380 மீட்டர் நீளத்திற்கு ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும். இவ்விடத்தில் பாலம் அமைத்திட, கடந்த பல ஆண்டுகளாக விளாத்திகுளம் வட்டாரப் பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் கோரி வருகின்றனர். நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு திட்டங்களில் இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் அமைத்திடப் பிரேரணைகள் பெறப்பட்டாலும், அதிகமான நிதி ஒதுக்கீடு தேவை காரணமாக அரசின் யாதொரு அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும் இப்பாலப் பணி இடம் பெறவில்லை.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 ஏப்ரல் 12

3. தற்போது, NABARD வங்கியின் உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள, பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல், பாலமில்லாக் கடவுகளில் புதிய பாலம் கட்டுதல் திட்டத்தின்கீழ் மேற்குறிப்பிட்டுள்ள பாலம் கட்டுவதற்கு ரூ.900 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்படவுள்ளது. நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டவுடன், இப்பணியை எடுத்துச் செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.கே. பெருமாள்.

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உலக அரசியல் மாமேதை, பாரதி கண்ட புதுமைப் பெண், நவீன விஞ்ஞான உத்திகளைக் கையாண்டு விந்தைமிகு செயல்களைச் செவ்வனே செய்து வரும் தங்கத் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கி சமர்ப்பிக்கிறேன், தாயே!

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் நகரில் மிக அருகிலுள்ள சுமார் 350 மீட்டர் நீளமும், வெறும் 3 மீட்டர் அகலமும், 1.5 மீட்டர் உயரமும் உடைய மிகக் குறுகலான, தாழ்வான வைப்பாற்றுப் பாலம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டு, போக்குவரத்திற்குப் பெரிதும் இடையூறாக உள்ள இந்தப் பாலத்தைத் திரும்பக் கட்டித் தர வேண்டும். விருதுநகர் மாவட்டத்தில், மழை பெய்தாலும்கூட, அங்குள்ள காட்டாற்றின்மூலம் ஏற்படுகின்ற வெள்ளப் பெருக்கினால் உற்பத்தியாகும் தண்ணீரானது, மிகத் தாழ்வான, அந்த ஒரு வழிப் பாதை வழியாக வந்து, பாலத்திலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரமுள்ள கடலில் சென்று கலக்கிறது. மேலும் வெள்ளப் பெருக்கின்போது, பாலத்தின் உயரத்திற்கு மேலாகச் சுமார் 6 அடி தண்ணீர், 15 முதல் 20 தினங்கள் வரை செல்கிறது. இதனால் போக்குவரத்து தடைப்படுவது மட்டுமின்றி, உயிர்ச் சேதங்களும் ஏற்படுகின்றன. கடந்த 2–11–2004 அன்றுகூட, ஒரு கூலித் தொழிலாளி இறந்துள்ளார். மேலும், இந்த நாட்களில், கால்நடையாகப் பயணம் மேற்கொண்டு, திருச்செந்தூர் முருகனைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கும் இது இடையூறாக உள்ளது. தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்தி வருகின்ற உன்னதத் தாய், உடனடியாகப்

2005 ஏப்ரல் 12] [திரு. என்.கே. பெருமாள்]

பகுதி–2 திட்டத்தில் அல்லது NABARD திட்டத்தில் இணைத்து, 900 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இவ்வாண்டே இப்பணியைத் தொடங்கி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் இந்தப் பாலம் கட்டப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக, அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய இவ்விடத்தில் பாலம் அமைத்திடக் கோரி, அந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவம் கருதி, கடந்த பல ஆண்டுகளாக, விளாத்திகுளம் வட்டாரப் பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் கோரி வருகின்றனர். நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு திட்டங்களில், இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் அமைத்திடப் பிரேரணைகள் பெறப்பட்டாலும், அதிகமான நிதி ஒதுக்கீடு தேவை காரணமாக, இதற்கு முன்னாலிருந்த அரசின் யாதொரு அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும், இப்பாலப் பணி இடம்பெறவில்லை. ஆனால் தற்போது, மாண்புமிகு அம்மாவின் அரசால், NABARD வங்கியின் உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள, பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல் மற்றும் பாலமில்லாக் கடவுகளில் புதிய பாலம் கட்டுதல் திட்டத்தின்கீழ், மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டுவதற்கு, 900 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்படவுள்ளது. நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டவுடன், இப்பணியை எடுத்துச் செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.கே. பெருமாள்.

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி மக்களுடைய நூறாண்டு காலக் கனவை நனவாக்குகின்றவண்ணமாக, தமிழகத்தை எல்லா வகைகளிலும் முதன்மையாக ஆக்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டே அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்மூலமாகக் கட்டித் தரவேண்டுமென்று பணிவான வணக்கத்துடன் கேட்டுக்கொண்டு, நன்றியோடு விடைபெறுகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS